| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| சா.சேதுராமவர்மா<br>அரசுத் தேர்வுகள்இயக்குநர்,<br>சென்னை – 600 006. | செய்தி ஆசிரியர்,<br>அனைத்து செய்தி ஊடகங்கள். |

ந.க.எண். 011518 /எச்1 /2022 நாள் : 20.08.2022

ஐயா / அம்மையீர்,

**பொருள் :** சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத்தேர்வு, ஜூலை / ஆகஸ்ட் 2022 – தேர்வு முடிவு – மதிப்பெண் பட்டியல் பதிவிறக்கம் செய்துக் கொள்ளுதல், விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறைகள் குறித்து செய்திக்குறிப்பு வெளியிடக் கோருதல் – தொடர்பாக.

–––––

நடைபெற்ற ஜூலை / ஆகஸ்ட் 2022 மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) துணைத்தேர்வு முடிவினை மதிப்பெண் பட்டியலாக பதிவிறக்கம் செய்துக் கொள்ளுதல், விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறைகள் குறித்து செய்திக்குறிப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இச்செய்திக்குறிப்பினை மாணவர்கள் / தேர்வர்கள் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி தங்கள் நாளிதழில் / தொலைக்காட்சியில் / வானொலியில் செய்தியாக வெளியிடும்படி கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இது செய்திக்குறிப்பு மட்டும். விளம்பரம் அல்ல.

**இணைப்பு:** செய்திக்குறிப்பு

ஒம்/–
இயக்குநர்

**அரசுத் தேர்வுகள் இயக்ககம் சென்னை–6**

**மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) துணைத்தேர்வு ஜுலை / ஆகஸ்ட் 2022**
**தேர்வு முடிவுகளை மதிப்பெண் பட்டியலாக பதிவிறக்கம் செய்து கொள்ளுதல்,**
**விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறைகள்**

**செய்திக்குறிப்பு**

நடைபெற்ற ஜுலை / ஆகஸ்ட் 2022, மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) துணைத் தேர்வெழுதிய தேர்வர்கள் தேர்வு முடிவினை, மதிப்பெண் பட்டியலாக (Statement Of Marks) 22.08.2022 (திங்கட்கிழமை) பிற்பகல் 2.00 மணி முதல் இணையதளத்திலிருந்து தங்களது தேர்வெண் (Roll No.) மற்றும் பிறந்த தேதியை (Date of Birth) பதிவு செய்து ஆன்லைனில் பதிவிறக்கம் செய்துகொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது.

**வழிமுறைகள் பின்வருமாறு:**

1. தேர்வர்கள் வருகிற 22.08.2022 (திங்கட்கிழமை) பிற்பகல் 2.00 மணி முதல் தமது மதிப்பெண் பட்டியலை www.dge.tn.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

2. மேற்படி இணையதள முகவரிக்குள் Login செய்தவுடன் Result தோன்றும். அதில் **“HSE Second Year Supplementary Exam, Jul / Aug 2022 - Result - Statement Of Marks Download”** என்ற வாசகத்தினை “Click” செய்தால் தோன்றும் பக்கத்தில் தேர்வர்கள் தங்களது தேர்வெண் (Roll No.) மற்றும் பிறந்த தேதி (Date of Birth) ஆகிய விவரங்களை பதிவு செய்து, தங்களது மதிப்பெண் பட்டியலினை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது.

**விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறை:**

ஜுலை / ஆகஸ்ட் 2022, மேல்நிலை துணைத் தேர்வுக்கான விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு **24.08.2022 ( புதன்கிழமை) மற்றும் 25.08.2022 (வியாழக்கிழமை)** ஆகிய இரண்டு நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நேரில் சென்று உரிய கட்டணம் செலுத்தி பதிவு செய்து கொள்ள வேண்டும்.

**விடைத்தாள் நகல் (Scan Copy of the Answer Script) பெறுவதற்கான கட்டணம்:**

ஒவ்வொரு பாடத்திற்கும் – ரூ.275/–

**மறுகூட்டல் –I (Re-totalling-I) கட்டணம் :**

உயிரியல் பாடத்திற்கு மட்டும் – ரூ.305/–
ஏனையப் பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) – ரூ.205/–

ஒம்/–
அரசுத் தேர்வுகள்இயக்குநர்

இடம் : சென்னை–600 006.
நாள் : 20.08.2022.